DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

SESSIONS CASE NO: 99/18

| | | | |
|---|---|---|---|
| Name | : காந்திமதி | Deposition of Witness for : | 3 |
| Father's Name | : துரைச்சாமி | Caste | : |
| Age | : | Calling | : |
| Village | : | Taluk | : |
| | | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 18.02.2020

முதல் விசாரணை

சத்தியமாக சொல்கிறேன். நான் தற்போது திருச்சி மாவட்டம் துவாக்குடி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 11.10.13 ம் தேதி காங்கேயம் மதுவிலக்கு அமலாக்கபிரிவில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது மதுவிலக்கு காவல் ஆய்வாளர் கதிரவன் அவர்களுக்கு கிடைத்த உத்தரவு படி அவரும் நானும் என்னுடன் பணிபுரிந்த மற்றொரு உதவி ஆய்வாளர் கோமதி முதல்நிலை காவலர்கள் செல்வகுமார் அன்பரசு மற்றும் காவலர்களுடன் புறப்பட்டு வெள்ளகோயில் சரகம் காங்கேயம் டூ கோவை ரோட்டிலுள்ள வெள்ளகோயில் ரிலையன்ஸ் பெட்ரோல் பங்க் அருகில் குட்டக்காடு பிரிவு அருகே வாகன தணிக்கை செய்த போது எங்களுடன் மத்திய புலனாய்வு ஆய்வாளர் திருமதி பத்மாவும் உடன் இருந்தார்.அப்போது மேற்கிருந்து கிழக்கு நோக்கி வந்த டாடா சுமோ விக்டா டிஎன் 09 எக்ஸ் 7729 என்ற எண்ணுள்ள வாகனத்தை நிறுத்தி விசாரிக்க அதில் வந்த நபர் முன்னுக்கு பின் முரணாக கூறியும் இறுதியில் தன் பெயர் மணிகண்டன் என்றும் த/பெ.பாண்டியராஜ் திண்டுக்கல்லை சேர்ந்தவர் என்றும் கூறினார். அந்த வாகனத்தை ஆய்வாளர் பின்புற கதவை திறந்து சோதனை செய்த போது 35 லி பிடிக்கக்கூடிய வெள்ளை நிற கேனில் சுமார் 10 லி அளவிற்கு திரவம் இருந்தது . அதனை ஆய்வாளர் முகர்ந்து பார்த்த போது விச வாடை அடிப்பதாக சொன்னார். அதே வாகனத்தில் கோல்டன் சாய்ஸ் லேபிள் ஒரு கட்டு இருந்தது அந்த கட்டில் 2000 லேபிள் இருந்தது. விச வாடையுடன் இருந்த திரவம் மற்றும் போலி மதுபானத்தில் ஒட்டுவதற்கான லேபிள்கள் வைத்திருந்ததால் ஆய்வாளர் மேற்படி மணிகண்டனை அன்று 14 மணிக்கு கைது செய்தார். பின்னர் அவர் எந்த அச்சுறுத்தலும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பொது ஜன சாட்சிகள் யாரும் முன்வராததால்

-2-

உடன் வந்த கோமதி மற்றும் செல்வகுமார் ஆகியோர் முன்னிலையில் ஆய்வாளர் பதிவு செய்தார்.

பின்னர்அதே சாட்சிகள் முன்னிலையில் மேற்சொன்ன டாடா சுமோ கார் மேற்சொன்ன 35 லி பிடிக்கக்கூடிய வெள்ளை நிற கேனிலிருந்து மாதிரிக்காக சுமார் 375 மிலி பிடிக்கக்கூடிய 2 கண்ணாடி பாட்டில்களில் தலா 350 மிலி வீதம் எடுத்து அதற்கு காடா துணி சுற்றி மூடி எஸ்எச்ஒ சீல் வைத்து எ1 எ2 என குறியீடு செய்துவிட்டு மீதி திரவத்தையும் அந்த லேபிள்களையும் ஒரு கைப்பற்றி மகஜர் எழுதி கைப்பற்றினார் அதில் சாட்சிகளிடம் கையெழுத்து பெற்றார். மணிகண்டன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இன்னும் சில நபர்கள் சம்பந்தப்பட்டு இருப்பதாக சொன்னதன் அடிப்படையில் குட்டகாட்டில் உள்ள காளியப்பன் என்பவரது குடோனுக்கு சென்றோம். போலீசார் வருவதை பார்த்து அங்கிருந்த 3 நபர்களில் 2 நபர்கள் தப்பி ஓடிவிட்டனர். காளியப்பன் என்பவரிடம் ஆய்வாளர் விசாரித்த போது அவர் போலி மதுபானங்கள் தயாரிக்க தேவையான பொருட்களும் மற்றும் உபகரணங்களை மேற்படி குடோவுனில் வைத்திருப்பதாக ஒப்புக் கொண்டார். ஆய்வாளர் மேற்படி குற்றத்திற்காக காளியப்பனை கைது செய்து தகவல் சொல்லி வரவழைத்த வெள்ளகோயில் கிராம நிர்வாக அதிகாரி பெயர் ஞாபகமில்லை மற்றும் அவரது உதவியாளர் ஆகியோர் முன்னிலையில் காளியப்பன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் பதிவு செய்தார். அங்கிருந்த வழக்கில் சம்பந்தப்பட்ட சொத்துக்களை அதே சாட்சிகள் முன்னிலையில் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் எழுதி கைப்பற்றினார். சாட்சிகளிடம் அதில் கையெழுத்து பெற்றார். மேற்படி சொத்துகளுக்கு காலவர்களை பாதுகாப்பாக நியமித்து விட்டு காளியப்பன் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கில் மற்றொரு எதிரியான பொன்னாத்தாள் என்ற பொன்மணி வீட்டிற்கு மலைபாளையத்திற்கு சென்றார்கள் . நான் மேற்படி காளியப்பன் குடோவுனிலிருந்து கைப்பற்றிய சொத்துகளை ஆய்வாளர் உத்தரவு படி காங்கேயம் மதுவிலக்கு அமலாக்கபிரிவு காவல்நிலையத்திற்கு எடுத்துசெல்லும் பணியை செய்தேன். பின்னர் இரவு சுமார் 12 மணியளவில் எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துகளுடன் காங்கேயம் மதுவிலக்கு அமல் பிரிவு காவல்நிலையம் வந்த ஆய்வாளர் காநிகுஎண்.717/13 சட்டபிரிவு 4(1) (aaa) 4 (1 -A) TNP Act and Section 5, 6, 7 TNRS 2000 மற்றும் பிரிவு 420 468 471 இதச கீழ் வழக்கு பதிவு செய்தார். பின்னர் 12.10.13 தேதி ஆய்வாளர் என்னை விசாரித்தார். 25.10.13 ம் தேதி காவல்ஆய்வாளர் உத்தரவு படி இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி செவ்வந்து என்பவரை கைது செய்ய வேண்டி ஆய்வாளருடன் நானும் உதவி ஆய்வாளர் கோமதி மற்றும் காவலர்களும் தகவல் அடிப்படையில் வெள்ளகோயில் பேருந்து நிலையம் சென்று அங்கு திருப்பூர் பேருந்து நிற்கும் இடத்தில் நின்றிருந்த செவ்வந்துவை ஆய்வாளர் விசாரித்து கைது



செய்தார். அப்போது மேற்படி செவ்வந்து எவ்வித ஆசை வார்த்தை துன்புறுத்தலும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பொதுமக்கள்சாட்சிகள் யாரும் முன் வராததால் உடன் சென்ற எனது முன்னிலையிலும் கோமதி முன்னிலையிலும் ஆய்வாளர் பதிவு செய்தார். அதில் நானும் கோமதியும் சாட்சி கையெழுத்து செய்தோம். செவ்வந்து அவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னபடி மலைபாளையத்திலுள்ள பொன்னாத்தாள் என்கிற பொன்மணி

என்பவரது வீட்டிற்கு பின்புறம் சென்று மேற்படி செவ்வந்து எடுத்து ஆஜர் செய்த காலிகேன்கள் மூன்று 35 லி பிடிக்கக்கூடிய கேன்கள் அதில் 2 ல் எரிசாராயம் சுமார் 10 லி அளவிற்கு இருந்தது. அதிலிருந்து மாதிரிக்காக தலா 375 மிலி பிடிக்கக்கூடிய 4 கண்ணாடி பாட்டில்களில் தலா 350 மிலி அளவிற்கு மேற்படி திரவ மாதிரி எடுத்து காடா துணி சுற்றி மூடி சீல் வைத்து டி1 முதல் டி 4 என குறியீடு செய்யப்பட்டது. 35 லி பிடிக்கக்கூடிய காலிகேன்கள் மூன்று 50 லி பிடிக்கக்கூடிய நீலநிற கேன் இரண்டு 180 மிலி அளவுள்ள பிளாஸ்டிக் பாட்டில்கள் ஒரு அட்டைபெட்டியில் 48 வீதம் 2 அட்டை பெட்டிகள் , ஸ்டிக்கர்கள் ஒரு கட்டுக்கு 100 வீதம் 10 கட்டுகள் , டைப் 1 பிளாஸ்டிக் கேமல் லேபிள் என எழுதப்பட்ட 1 கிலி பிடிக்கக்கூடிய பாட்டில்கள் இரண்டு, 700 மிலி பிடிக்கக்கூடிய கேமல் கம் (எண்ணிக்கை ஞாபகமில்லை) , மில்லினம் வெண்ணிலா எசன்ஸ் தலா 500 மிலி அளவில் 2 பாட்டில்கள் , காலி தண்ணீர் கேன்கள் 20 லி பிடிக்கக்கூடியது 9 எண்ணிக்கை , 180 மிலி எழுதப்பட்ட கோல்டன் சாய்ஸ் லேபிள்கள் ஒருகட்டுக்கு 2000 வீதம் 5 கட்டுகள், மானிட்டர் பிராந்தி 180 மிலி என எழுதப்பட்ட லேபிள்கள் ஒரு கட்டுக்கு 2000 வீதம் ஒரு கட்டு , காலி அட்டை பெட்டிகள் 10 எண்ணிக்கை, இன்னொரு லேபிள் கட்டு பெயர் ஞாபகமில்லை ஆகியவற்றை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் எழுதி கைப்பற்றினார் . அதில் நானும் கோமதியும் சாட்சி கையெழுத்து செய்தோம். மேலும் எதிரி செவ்வந்து தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் போக்குவரத்திற்கு 5 வாகனங்கள் பயன்படுத்தியதாக சொன்னதன் அடிப்படையில் பொலிரோ ஜீப் டிஎன் 39 எஎம் 3399, டாடாவிக்டா டிஎன் 09 எக்ஸ்7729, குருசியர் டிஎன் 45 எசி 8674, சபாரி டிஎன் 39 எஎம் 0550, ஈச்சர் வேன் டிஎன். 01 எஎக்ஸ் 1148 ஆகிய வாகனங்களை பயன்படுத்தியதாக சொன்னார்.

குறுக்கு விசாரணை 1 மற்றும் 5 முதல் 8 எதிரிகள் தரப்பில்

முதலில் ஆய்வாளர் என்னை விசாரித்த போது உதவி ஆய்வாளர் கோமதி மத்திய புலனாய்வு காவல்ஆய்வாளர் பத்மாவதி ஆகியோர் என்னுடன் இருந்த விவரத்தை சொன்னேனா என்றால் பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை. மணிகண்டன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் யார் யார் சாட்சி கையெழுத்து போட்டோம் என்பதை ஆய்வாளர் விசாரணையில் சொன்னேனா என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை. மேற்படி நிகழ்வுகளின் போது ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன்

-4-

என்றால் சரிதான். எதிரி மணிகண்டனை கைது செய்த இடம் வாகன போக்குவரத்து மற்றும் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடம் என்றால் சரிதான். அப்போது பொதுமக்களை யாரையும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் யாரும் சாட்சியாக இருக்க முன்வராததால் சேர்க்கவில்லை. விசாரித்த நபர்களின் பெயர் எனக்கு ஞாபகமில்லை. நான் சொன்ன நாள் மற்றும் நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து எதிரி மணிகண்டனிடம் எந்த கையெழுத்தும் ஆய்வாளர் பெறவில்லை என்றாலும் கைதும் செய்யவில்லை என்றாலும் அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் எந்த வழக்கு சொத்தும் கைப்பற்றபடவில்லை என்றாலும் சரியல்ல.

12.10.13க்கு பிறகு எந்த ஆய்வாளரும் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதால் நான் உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை எதிரி 3 மற்றும் 10 ம் எதிரி தரப்பில்

அசா 1 அழைத்ததன் பேரில் தான் நான் வாகன சோதனைக்கு சென்றேன் என்றால் சரிதான். அப்போது அசா 1 எனது மேலதிகாரி என்றால் சரிதான். குட்டக்காடு குடோவுனுக்கு சென்றபோது பிற்பகல் சுமார் 4 மணியிருக்கும். அப்போது ஆய்வாளரும் நானும் இன்னொரு உதவி ஆய்வாளரும் மற்றும் காவலர்களும் சென்றோம். காவலர்கள் எண்ணிக்கை ஞாபகமில்லை. குட்டக்காடு குடோவுனில் சுமார் 2 மணி நேரத்திற்கு மேல் இருந்தோம். மேற்படி குடோவுன் தனியாக இருந்ததா ஊரோடு சேர்ந்து இருந்ததா என்றால் அதை சுற்றி வீடுகள் இருந்தன. மேற்படி குடோவுன் இருந்த தெரு பெயர் ஞாபகமில்லை. அங்கு சுமார் எத்தனை வீடுகள் இருந்தது என்றால் ஞாபகமில்லை. கோடவுனை சுற்றி வீடுகள் இருந்ததா என்றால் சற்று தள்ளி தள்ளி இருந்தது. 200 மீ 500 மீ மற்றும் ½ பர்லாங் தூரம் ஆகிய தூரங்களில் வீடுகள் இருந்தன. குடோவுனுக்கு இடது புறத்தில் வீடுகள் இருந்தன. வலது புறத்தில் காலி இடம் இருந்தது. மேற்படி குடோவுன் கிழக்கு திசை நோக்கி இருந்தது. குடோவுனை சுற்றி சுற்று சுவர் இருந்தது. ஒரு நுழைவாயில் இருந்தது. மேற்படி குடோவுன் நுழைவாயில் வடக்கு புறம் மதில் சுவரில் இருந்தது. மேற்படி குடோவுனில் வைத்து ஆய்வாளர் ஆவணம் ஏதும் எழுதினாரா என்றால் ஆம் எழுதினார் எதிரி காளியப்பன் ஒப்புதல் வாக்குமூலம் கைப்பற்றுதல் மகஜர் ஆகியன தயார் செய்தார். மேற்படி ஆவணங்களை ஆய்வாளர் எழுதினரா மடிக்கணிணியில் தட்டச்சு செய்தாரா என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. குடோவுனில் சோதனை செய்த போது தனிப்பட்ட சாட்சிகள் அங்கு யாரேனும் இருந்தார்களா என்றால் அதை நான் பார்க்கவில்லை. குடோவுனில் இருந்து என்னென்ன பொருட்கள் கைப்பற்றினார்கள் என்றால் நிறைய பொருட்கள் கைப்பற்றினார் ஆனால் அவை முழுவதையும்



ஞாபகமாக சொல்லமுடியாது. குட்டக்காடு கோடவுனில் நடந்த சோதனை சம்பந்தமாக ஆய்வாளர் என்னிடம் வாக்குமூலம் பதிவு செய்தாரா என்றால் செய்யவில்லை. நான் சொன்ன நாள் மற்றும் நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து எதிரி காளியப்பனிடம் எந்த கையெழுத்தும் ஆய்வாளர் பெறவில்லை என்றாலும் கைதும் செய்யவில்லை என்றாலும் அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் எந்த வழக்கு சொத்தும் கைப்பற்றபடவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதால் நான் உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை 2 மற்றும் 9 எதிரிகள் தரப்பில்

எதிரிகள் ராமசந்திரன் மற்றும் அப்பான் என்ற மகேஸ்வரன் ஆகியோரை இந்த

வழக்கில் எவ்வாறு சேர்த்தார்கள் என்பது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. அவர்களை கைது செய்தது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. அவர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதா அதன் அடிப்படையில் அவர்களிடமிருந்த சொத்துகள் எதுவும் கைப்பற்றப்பட்டதா என்பதும் எனக்கு தெரியாது.

மறுவிசாரணை

இல்லை.